

அண்ணாநகர் ரவுண்டானாவில் சுரங்கப்பாதை அமையும் இடம்.

### சாலையை எளிதில் கடக்க

# அண்ணாநகர் ரவுண்டானாவில் சுரங்க நடைபாதை

## மெட்ரோ ரெயில் நிறுவனம் அமைக்கிறது

சென்னை, அக்.11–

பயணிகள், பொதுமக்கள் சாலையை எளிதில் கடந்து செல்ல வசதி யாக அண்ணா நகர் ரவுண்டானாவில் சுரங்க நடைபாதையை மெட்ரோ ரெயில் நிறுவனம் அமைக்கிறது.

**அண்ணாநகர் ரவுண்டானா**

அண்ணாநகர் ரவுண்டானாவை கடந்து செல்ல வாகனங்கள் தினமும் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றன. பாதசாரிகளும் சாலையை கடக்க பெரிதும் அவதிப்பட்டு வந்தனர்.

அந்த பகுதியில் மோட்டார் சைக்கிள், வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டு வருகிறது.

**சுரங்க நடைபாதை**

அப்பகுதியில் உள்ள போக்குவரத்து சிக்னலில் நீண்ட நேரமாக வாகனங்கள் சிக்கி தவித்து வருகின்றன. மெட்ரோ ரெயில் பயணிகள், பாதசாரிகள் சாலையை எளிதில் கடக்க வசதியாக மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் ரவுண்டானா அருகே சுரங்க நடைபாதை விரைவில் அமைக்கப்பட உள்ளது. இதற்காக அங்கு மண் ஆய்வு பரிசோதனை தொடங்கியது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

அண்ணாநகர் ரவுண்டானா பகுதியில் போக்குவரத்து நெருக்கடியால் வாகனங்கள் எளிதில் கடந்து செல்ல முடியவில்லை. அருகில் உள்ள மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு வரும் பயணிகள் மற்றும் பொது மக்களும் சாலையை கடக்க தினமும் அவதிப்படுகிறார்கள்.

இதை கருத்தில் கொண்டு அண்ணாநகர் ரவுண்டானா அருகே மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் சுரங்க நடைபாதை விரைவில் அமைக்கப்பட உள்ளது.

**நெருக்கடி தீரும்**

இதன்மூலம் விரைவில் அப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி தீரும். எளிதில் சாலையை பயணிகள், பொதுமக்கள் கடந்து செல்ல வசதி ஏற்படும். அண்ணாநகர் பகுதியில் இருவழிப்பாதை போக்கு வரத்து காரணமாக ஏராள மான வாகனங்கள் அண்ணாநகர் ரவுண்டானாவை கடந்து செல்கின்றன.

இனிமேல் சுரங்கப்பாதை அமைக்கப்படுவதால் போக்குவரத்து நெரிசல் குறையும். அண்ணாநகர் கிழக்கு மெட்ரோ ரெயில் நிலையம், டவர் பூங்கா செல்லும் பொதுமக்கள், பயணிகளுக்கு இந்த சுரங்கப் பாதை பெரும் உதவியாக அமையும்.

இவ்வாறு அவர் கூறினார்.